DEPOSITION OF WITNESS

( Chapter XXIII Code of Criminal Procedure)

***

IN THE COURT OF SUBORDINATED JUDGE MADURANTAKAM

Calender :
Miscellaneous : SC No.78/2020
Deposition of Witness for : PW 11

| | |
|---|---|
| Name. | மருத்துவர்.திரு. ராஜேஷ் |
| Father /Husband Name | |
| Village | |
| Taluk | |
| Calling | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day 15.09.2025

**எதிரிகள் ஆஜர்.**

## முதல் விசாரணை

1) நான் தற்பொழுது கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோயிலில் தனியாக மருத்துவமனை நடத்தி வருகிறேன். நான் கடந்த 28.05.2016 அன்று சென்னை ராஜிவ் காந்தி அரசு மருத்துவக் கல்லூரி மருததுவமனையில் உதவி பேராசிரியராக பணி புரிந்த பொழுது 28.05.2016 அன்று மதுராந்தகத்தை சேர்ந்த கண்ணன் மகன் கோகுல் ராஜ் என்பவர் அனுமதிக்கப்பட்டிருந்தார். அவருக்கு தலையில் காயம் பட்டிருந்தது. அவரது தலையை ஸ்கேன் செய்து பார்த்ததில் வலது புற மண்டை ஓடு உடைந்து காணப்பட்டிருந்தது. மூளையில் ரத்த கசிவு காணப்பட்டிருந்தது. அதற்காக அவருக்கு அறுவை சிகிச்சை மேற்கொள்ளப்பட்டு ரத்த கட்டு அகற்றப்பட்டது. மேற்கொண்டு அவருக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு 4.6.2016 அன்று விடுவிக்கப்பட்டார். அவருக்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என கருத்துரை வழங்கினேன். **அந்த கருத்துரை அ.த.சா–ஆ.5**. இது சம்மந்தமாக காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

2) 28.06.2016 தேதியில் மருத்துவமனையில் சிகிச்சை அளிக்கக் கூடிய அதிகாரம் எனக்கு இருந்தது. நான் அக்காலக் கட்டத்தில் நரம்பியல் துறையில்

உதவி பேராசிரியராக இருந்தேன் என்றால் சரிதான். அ.த.சா.ஆ.5 ல் தேதி குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. 4.6.2016 என்று குறிப்பிடப்பட்டுள்ளது. 28.05.2016 முதல் 04.06.2016 வரை அடிப்பட்ட நபருக்கு நான் மட்டும் சிகிச்சை அளித்தேனா என்றால் என் தலைமையிலான குழு சிகிச்சை அளித்தது. வெட்டுக் காயங்கள் இரும்பு கம்பியில் மோதினால் ஏற்பட வாய்ப்புள்ளது என்றால் சரிதான். தலையில் ஏற்பட்ட காயத்தைத் தவிர உடலில் வேறு எங்கும் காயம் இல்லை என்றால் சரிதான். அ.த.சா.ஆ.5 எத்தனை நபர்கள் அடிப்பட்ட நபரை தாக்கினார்கள் என்ற விவரம் இல்லை என்று சொன்னால் சரிதான். அடிப்பட்ட நபரை பார்வையிட்டு மற்றும் சிகிச்சை அளித்தது என் தலைமையிலான குழு என்றால் சரிதான். அறுவை சிகிச்சை 28.05.2016 அன்று செய்யப்பட்டது. அந்த அறுவை சிகிச்சை சாதாரணமானது என்று சொன்னால் சரியல்ல. ஏற்கனவே செங்கல்பட்டு மருத்துவமனையில் சிகிச்சை அளிக்கப்பட்டு அதன் தொடர்ச்சியாகத்தான் நான் மேல் சிகிச்சை மேற்கொண்டேன் என்றால் சரிதான். என்னை போலிசார் என்று விசாரித்தனர் என்று ஞாபகம் இல்லை, எந்த போலிசார் விசாரித்தனர் என்றும் ஞாபகம் இலலை. மூளையில் ரத்தக் கசிவு என்பது கீழே பலமாக மோதினால் ஏற்பட வாய்ப்புள்ளது என்றால் சரிதான்.

மறுவிசாரணை – இல்லை.